


| | |
|---|---|
| அளவர் / உதவிவரைவாளர் | |
| வரைவாளர் நிலை III | |
| மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை II | |

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Erode
Date:2023.05.08 19:17:42

# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

## மொடக்குறிச்சி பேரூராட்சி

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண்–33/1A, –ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் (திட்டமில்லா பகுதி).

அளவு : 1:400

இணையவழி விண்ணப்ப எண்: ZR35WK86, Date:14/09/2022

**குறிப்பு :**

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.88 ¾ ஏக்கர் (3593.00ச.மீ)

ஒதுக்கிய மனைகள் : 11

வ

மனைப்பிரிவின் எல்லை ..................

நிலையிலுள்ள சாலை ..................

**பொது ஒதுக்கீடு**

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை**

மனைப்பிரிவின் சாலையின் பரப்பு : 999.75 ச.மீ ..................

பூங்கா : (மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x10%
: (3593.00 - 999.75 = 2593.25) x 10% = 259.33ச.மீ

பூங்கா பரப்பு : 259.33 ச.மீ(10.0 %) (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது)

பொது உபயோகம்(A) : 30.84ச.மீ(1.19%) ..................
தான ஆவண எண் : 1140/2023, நாள். 7.2.2023

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்காக தானமாக ஒப்படைக்கப்பட்டவை:**

பொது உபயோகம்(B) : 50.17ச.மீ(1.93%) ..................
தான ஆவண எண் : 1141/2023, நாள். 7.2.2023

கட்டிட வரம்பு : 9.0மீ வரை அகலம் கொண்ட சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்
9.0மீ க்கு மேல் 18.0மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்

மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்
12.0மீ க்கு மேல் 30.5மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.50மீx4.50மீ விடப்படல் வேண்டும்

**நிபந்தனைகள்**

1. அரசாணை எண்–18 ந.நி மற்றும் கு.நீ.வ துறை நாள் 04.02.2019 (ம) அரசாணை எண்–16 ந.நி மற்றும் கு.நீ.வ நாள் 31.01.2020 ன் படி மேற்கொள்ளப்பட வேண்டும்.
   அரசாணை எண்–181 வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020–ல் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண்–141 வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ4(3)த் துறை நாள்.16.07.2022–ல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், (EO) செயல் அலுவலர் மொடக்குறிச்சி பேரூராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. மேற்படி இடத்தினை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
9. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுச்சுவர் (Compound Wall) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அருகில் இருக்கும் இடத்திற்கு இணைப்புப்பாதை அமையும் வகையில் சுற்றுச்சுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

**SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO: 177 / 2023**

துணை இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.